2004 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கண்ணன், இது மானியக் கோரிக்கையில் இல்லை; கேள்வியைக் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

திரு. ஏ.எஸ். கண்ணன்: இதிலே தீவிரமாகத் தலையிட்டு தீர்வுகாண வேண்டுமென்று சபாநாயகரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபாநாயகரைக் கேட்க முடியாது. *(சிரிப்பு)*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாம்பல் கலந்த அந்த நீர், கடந்த காலத்திலே, அது மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, அந்த ஆற்றிலும் கடலிலும் விடப்பட்டது உண்மைதான். ஆனால், இப்போது, சாம்பல் வெளியே விடப்படுவது இல்லை. சாம்பலை உபயோகப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, உள்ளேயே குளம் வெட்டி, அதிலே தான் அந்த சாம்பல் அனுப்பப்படுகிறது. எனவே, இப்போதுகூட நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதன்படி, ஓர் அறிக்கையை நாங்கள், தூத்துக்குடியிலே உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திடமிருந்து பெற இருக்கிறோம். அதைப் பெற்ற பிறகுகூட, என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 30, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 10-50

30—

அளவீடு பொருத்துதல்

***35629—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுயநிதித் திட்டத்தில் மின் இணைப்புப் பெற்ற விவசாயிகளின் கிணற்று நீரிறைப்பான் இயந்திரங்களுக்கு அளவீடு பொருத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடை.

25-4-1998 அன்று மைய சட்டத்தின்படி State Electricity Regulatory Commission அமைக்கப்பட்டது. 17-3-1999 அன்று State Electricity Regulatory Commission அமைக்கப்பட்டது. 2001 மார்ச் மாதத்தில் Accelerated Power Development Programme-படி நிதியைப் பெற்றார்கள். அந்த அடிப்படையிலே அரசும், மைய அரசும் ஒப்பந்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு, அந்த அடிப்படையிலே 31-3-2003-ன்படி எல்லா விவசாய மின் நுகர்வோர்களுக்கும் மீட்டர் பொருத்துவதற்கு 31-3-2003-லிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன. இந்த சுயநிதித் திட்டத்தின்கீழே பிரிந்தவர்கள் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் வரை கட்டிய பின்னாலேகூட பல ஆண்டுகள் இணைப்புக்காக காத்து இருக்க வேண்டிய சூழ்நிலை இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் 5 எச்.பி. மோட்டாருக்கு 1,450 ரூபாய் பணம் கொடுப்பதாக முடிவு எடுத்தபோது, 5 எச்.பி. மோட்டார் ஓர் ஆண்டுக்கு 1,000 யூனிட்தான் consume பண்ண வேண்டும் என்று ஒரு கணக்கு போடப்பட்டு இருந்தது. ஆனால், இன்றைக்கு நிலத்தடி நீர் ஆயிரம் அடிக்குக் கீழே போய்விட்டதனாலே, அந்த மோட்டாரை பயன்படுத்தும்போது, அது 1,000 யூனிட் அல்ல, 5,000 யூனிட் அல்ல, 10,000 ஆயிரம் யூனிட் வரை செலவாகின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அரசு இந்த 1,450 ரூபாய் கொடுப்பதை அதிகப்படுத்தி கொடுப்பதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

2004 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Self Finance Scheme என்று சொல்லும்போது, -- 10 ஆயிரம் ரூபாய் இருக்கின்றது; 25 ஆயிரம் ரூபாய் இருக்கின்றது; 50 ஆயிரம் ரூபாய் இருக்கின்றது; 50 ஆயிரம் ரூபாய் கட்டினால், உடனடியாக மின் இணைப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அந்த 10 ஆயிரம் ரூபாய், 25 ஆயிரம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் எங்கெங்கே எல்லாம், எதை Priority basis-ல் கேட்கிறார்களோ, அதைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதிகமான அளவிற்கு விவசாயிகள் அந்த உபயோகிப்புத் தன்மையை உபயோகிக்கின்றார்கள்; அந்தக் கட்டணத் தொகையை உயர்த்த முடியுமா; அரசு வழங்குகின்ற கட்டணத் தொகையை உயர்த்த முடியுமா என்று கேட்கின்றார்கள். இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். தாமோதரன்

திரு. எஸ். தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில வருடங்களாக கடுமையான வறட்சி இருப்பதால் ஆறுகளிலே தண்ணீர் இல்லை. விவசாயக்குடி பெருமக்களுக்கு 1991-க்கு பிறகு மின் இணைப்புகள் கொடுக்கப்படவில்லை. மின் இணைப்புகள் கொடுக்கும்பட்சத்தில் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து விவசாயத்தைப் பாதுகாக்க முடியும். இதைப் போர்க்கால நடவடிக்கையாக அரசு உடனடியாக மின் இணைப்புகள், டெலிபோன்கள் போல விவசாயத்திற்கும் கொடுக்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீர் அதிகமான அளவிற்கு tap செய்யப்படுவதைத் தவிர்க்க வேண்டுமென்கின்ற வகையிலே, சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. எனவே, அந்த நிலத்தடிநீர் பாதிக்காத வகையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அமையுமானால் நிச்சயமாக அதைப் பரிசீலிக்கலாம். மேலும், விண்ணப்பித்த்வுடன் மின் இணைப்பு கிடைப்பதற்கு நடவடிக்கை தற்போது மைய சட்டத்தின்படி எடுக்கப்பட்டு வருகின்றது.

[2004 பிப்ரவரி 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 31, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

31—

கோயில் திருப்பணி

***27186—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், வல்லக்கோட்டை முருகன் திருக்கோயிலுக்கு புதிய இராஜகோபுரம் அமைக்கும் மற்றும் திருக்கோயில் திருக்குளம் செப்பனிடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், வல்லக்கோட்டை அருள்மிகு முருகன் திருக்கோயிலில், தற்போது புதிய கொடிமரம் நிறுவவும் மற்றும் முன் மண்டபம் அமைக்கும் திருப்பணிகள் நடைபெற்று வருவதாலும், இத்திருப்பணிகள் முடிய சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகும் என்பதாலும், இத்திருப்பணிகள், முடிந்தவுடன், இத்திருக்கோயிலில் சுமார் ரூ.50,00,000 மதிப்பீட்டில் புதிய 5 நிலை இராஜகோபுரம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை, திருமதி டி. யசோதா.